JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
DEPOSITION OF WITNESS

CC.No.129/2022 Date:07.05.2024 P.W. 3

பெயர்	் திரு.கார்த்திக்
தந்தை பெயர், க/பெ	ராஜீவ்
முகவரி	
கிராமம்	
மாவட்டம்	
ஜாதி	
தொழில்	
மதம்	
வயது	

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 07th day of May 2024.

எதிரி ஆஜரில் உள்ளார்.

முதல் விசாரணை -

1. நான் தற்போது் நம்பர் 4/904, கோகுல் தெரு, ஜெ ஜெ நகர், சென்னையில் குடியிருந்து வருகிறேன். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். அது **அதசாஆ. 2** ஆகும். என்னுடைய நண்பரின் இருசக்கர வாகனம் காணாமல் போயிருந்தது. அதன்பின்பு காவல் நிலையத்தில் என்னை அழைத்தார்கள். அங்கு வாகனத்தை என் முன்னிலையில் யாரிடமிருந்து கைபற்றி ஒப்படைத்தார்கள் அதில் நான் சாட்சி கையெழுத்து இட்டேன். யாரிடம் அந்த இருசக்கர வாகனம் கைப்பற்றினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

அரசு தரப்பு சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதியின் பேரில் அரசு தரப்பு குறுக்கு விசாரணை -

2. போலீஸ் விசாரணையின் போது 11.08.2021ம் தேதி சொந்த வேலைக்காரணமாக காவல் நிலையம் வந்தபோது பின்பு பெயர் கேட்டு தெரிந்த வெங்கட் என்பவரை வி3 ஜெ ஜெ நகர் காவல் நிலைய குற்ற எண் 622/2021 என்ற வழக்கில் எதிரியை கைது செய்திருப்பதாகவும் அந்த வழக்கில் அந்த எதிரிகளின் பெயர் கவிதாசன், சக்திவேல் என்பவரிடமிருந்து இருசக்கர வாகனத்தை கைப்பற்றியிருப்பதாகவும் அதற்கு சாட்சியமாக போலீசார் இருக்கச்சொன்னார்கள் என்றும், அந்த வகையில் டிஎன் 85சி 9128 என்ற எமஹா வண்டியை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார்கள் என்று போலீஸ் விசாரணையின்போது கூறிவிட்டு தற்போது எதிரியை காப்பதற்காக பொய் சாட்சியம் கூறுகின்றேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை- இல்லை.

மறு விசாரணை- இல்லை

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Sd/- V.Paramveer,
Judicial Magistrate,
Ambattur.

//True Copy//

Judicial Magistrate,
Ambattur